# வானவில்

# VAANAVIL

| இதழ்124 | சித்திரை 2021 |
|---|---|
| ISSUE 124 | APRIL 2021 |


# உள்ளும் புறமும் சுற்றி வளைக்கப்படும் இலங்கை!




2019ஆம் ஆண்டு இலங்கையின் இன்றைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ மிகப்பெரிய பெரும்பான்மை வாக்குகள் பெற்று நாட்டின் ஜனாதிபதியானார். அதைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவர் சார்ந்திருந்த பொதுஜன பெரமுன தலைமையிலான பல கட்சிகளின் கூட்டணி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று ஆட்சிபீடம் ஏறியது. கோத்தபாயவின் சகோதரரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஸ பிரதமரானார்.

முதலில் ஒரு விடயத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இன்றைய அரசாங்கத்தில் பலவிதமான கருத்துப் போக்குள்ளவர்கள் அங்கம் வகிக்கின்றனர். அதாவது சிங்கள தேசியவாதிகள், சாதாரண தேசியவாதிகள், ஜனநாயகவாதிகள், இடதுசாரிகள், சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள், தாராளவாதிகள் என பல தரப்பட்டவர்கள் இந்த அரசாங்கத்தில் பங்காளிகளாக இருக்கின்றனர். இருப்பினும் அரசாங்கத்தின் பொதுவான போக்கு தேசியவாதமாகவும், ஓரளவு ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் இருக்கின்றது. சாராம்சத்தில் இதுதான் இன்றைய அரசாங்கத்தின் தன்மை அல்லது போக்காகும்.

இன்னுமொரு விடயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் பழம்பெரும் இடதுசாரிக் கட்சிகள் சில இந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும், அவற்றால் அரசாங்கத்தின் கொள்கைகளிலோ செற்பாடுகளிலோ தாக்கம் ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு அவை பலமுள்ளவையாக இல்லை. அதேபோல, வடக்கையும், கிழக்கையும், மலையகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சில தமிழ் கட்சிகள் இந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும், அவையும் அரசாங்கத்தின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் இல்லை. அதேவேளையில், அமைச்சரவையில் முஸ்லீம் ஒருவர் அங்கம் வகித்தாலும், நாட்டில் உள்ள பிரதான முஸ்லீம் கட்சிகள் எவையும் கூட அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளாக இல்லை.

இத்தகைய சூழ்நிலைகள் காரணமாக, அரசாங்கத்துக்குள் இருக்கும் சில கடும்போக்கு சிங்களத் தேசியவாதிகள் சிறுபான்மை இனங்களுக்கு எதிராகவும், முற்போக்கு கொள்கைகளுக்கு எதிராகவும் செயற்படுவதற்கு முனைப்புக்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதியும், பிரதமரும், அரசாங்கத்தில் உள்ள பெரும்பான்மையோரும் நாட்டின் சாதாரண மக்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு நன்மைகளைச் செய்ய வேண்டும் எனக்கருதிச் செயற்பட்டாலும், இந்த சிறு எண்ணிக்கையினரான கடும்போக்கு சிங்களத் தேசியவாதிகளின் நிலைப்பாடுகள் அவற்றுக்கு ஊறுவிளைவிப்பனவாக உள்ளன. இதுதான் அரசாங்கத்துக்குள்ளேயே அரசுக்கு உள்ள முதல் எதிரியாகும்.

இதைவிட, இன்றைய அரசாங்கத்துக்கு எதிராக நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் என இரு வகையான எதிரிகள் செயற்பட்ட வண்ணம் உள்ளனர். இவர்கள் இன்றைய அரசாங்கம் நாட்டின் ஏகப்பெரும்பான்மையான மக்களின் ஆதரவுடன்தான் பதவிக்கு வந்த அரசாங்கம் என நினைத்து மனம் சோர்ந்து இருந்துவிடவில்லை. ‘அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்’ என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட இந்த தேச விரோத, மக்கள் விரோத சக்திகள், தமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இன்றைய அரசுக்கு

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ஆப்கானிஸ்தான்: தொடரும் சதிகளும் துரோகங்களும்

உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீதான பயங்கரவாத தாக்குதல்களின் 20வது ஆண்டு நிறைவு தினமான செப்டம்பர் 11 இற்குள், ஆப்கானிஸ்தானில் இருந்து அனைத்து அமெரிக்க துருப்புக்களையும் திரும்பப் பெறப்போவதாக அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானின் கடந்த 42 ஆண்டுக்கால வரலாறு என்பது ஏவுகணைகளாலும், விமானக்குண்டு வீச்சுக்களாலும் துப்பாக்கிக் குண்டுகளாலும், மனிதர்களின் குருதிகளையும், உடல்களையும் சுமந்தே வந்துள்ளது. ஐரோப்பிய கண்டத்திற்கான ஆசியாவின் நுழைவாயிலென அழைக்கப்படும் ஆப்கானிஸ்தான், பல்வேறு முடியாட்சிகள், காலனித்துவ ஆட்சிகள், பிராந்திய ஆதிக்கங்கள், வல்லரசுகளுக்கிடையேயான மோதல்கள், இஸ்லாமிய தீவிரவாதம் என நீண்ட கரடுமுரடான பாதையில் பயணித்துள்ளது.

2001, ஒக்ரோபர் 7ம் திகதி, ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய தலிபான் ஆட்சிக்கு எதிராகவும் மற்றும் அந்நாட்டின் அல் கைடா (Al Qaeda) தளங்களுக்கு எதிராகவும் அமெரிக்கா ஒரு முழு அளவிலான இராணுவ தாக்குதலைத் தொடங்கியது. 1996ஆம் ஆண்டு முதல், ஆப்கானிஸ்தானைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த தலிபான் ஆட்சியை இழந்த போதிலும், தொடர்ந்து போரிட்ட வண்ணமேயிருந்தனர். அதனால் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்தது. போர் என்பது ஆப்கானிஸ்தானின் இயல்பு வாழ்க்கையாக மாறியது. 2010இல் அமெரிக்கப் படையினர் 1 இலட்சமாகவும், நேட்டோ நாட்டுப் படையினருடன் சேர்த்து மொத்தமாக ஒன்றரை இலட்சம் படைகள் ஆப்கானிஸ்தானில் குவிக்கப்பட்டிருந்தன.

2011, மே 2ம் திகதி, ஒசாமா பின்லாடன் அமெரிக்கப் படையினரால் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்க உத்தரவிட்டார், அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா. அதன்பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்பட்டு, தற்போது ஏறத்தாழ 7500 பேர் ஆப்கானிஸ்தானில் இருப்பதாக தெரிய வருகின்றது.

அமெரிக்கா – ஆப்கானிஸ்தான் போரில் குறைந்தது 1.5 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 45 ஆயிரம் பொது மக்கள். இந்தப் போரினால், உலகம் முழுவதும் ஏறத்தாழ 25 இலட்சம் ஆப்கானிஸ்தான் மக்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். அமெரிக்கப் படையினரில் 2,400 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் போருக்கு அமெரிக்கா மொத்தமாக ஏறத்தாழ 2 ட்ரில்லியன் (வருடம் 100 பில்லியன்) டொலர் பணம் செலவு செய்துள்ளது.

சோவியத் யூனியன் – அமெரிக்கா பனிப்போர் உச்சக்கட்டத்தில் இருந்த காலகட்டமான, 1973 ஜுலை 17 இல், ஆப்கானிஸ்தான் முடியாட்சி, அரச வம்சத்தைச் சேர்ந்த தாவூத் ஹானால் தூக்கியெறியப்பட்டது. இவர் சோவியத் சார்பாளராக இருந்தார். எனினும், ஆப்கானிஸ்தானில் எந்த வகையிலான ஆட்சி அமைய வேண்டும் என்பதில் ஆளும் அதிகார வர்க்கத்திற்குள் குழப்பங்கள் நிலவின. அதாவது மார்க்சிச, லெனினிச சித்தாந்தத்தின் வழிகாட்டலில் ஆப்கானிஸ்தானை சோசலிஸ்ட் நாடாக உருவாக்க வேண்டுமா, அல்லது சோவியத் சார்பு – இஸ்லாமியக் குடியரசாக இருந்தால் மாத்திரம் போதுமா போன்ற கருத்துக்களைக் கொண்ட பிரிவுகளிடையே மோதல்கள் நிகழ்ந்தன. இந்தப் பிரிவுகள் அவ்வப்போது இராணுவத் தலைமைகளையும் தம்பக்கம் இழுத்ததால் ஆப்கானிஸ்தான் பல சதிக்கு மேல் சதிகளைச் சந்தித்தது. 1978 ஏப்ரல் 28 இல் தாவூத் ஹான் மற்றும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டு மக்கள் ஜனநாயகக்கட்சியைச் (PDPA ) சேர்ந்த நூர் முஹமட் தராகி ஆப்கன் அதிபரானார். பின்னர் இவரும் 1979இல் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு, கொல்லப்பட ஹவிசுல்லா அமின் பதவிக்கு வந்தார்.

1978இல் கைச்சாத்திடப்பட்ட சோவியத் – ஆப்கானிஸ்தான் நட்புறவு ஒப்பந்தத்தின் அடிப்படையில், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 25ம் திகதி சோவியத் ரஷ்யாவின் செம்படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்தன. அதனைத் தொடர்ந்து டிசம்பர் 29ம் திகதி ஹவிசுல்லா அமின் கொல்லப்பட்டு, மக்கள் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த பாப்ரக் கர்மல் (Babrak Karmal) ஆப்கன் ஜனாதிபதியானார். 1986இல் சோவியத் யூனியன் கர்மலை ஓரங்கட்டி விட்டு, மொஹமட் நஜிபுல்லாவை (Mohammed Nadjiboellah) அதிபர் பதவியில் அமர்த்தியது.

இறுதியில் சோவியத் படைகள், முஜாஹிதீன் (Mujahideen) என்று பரவலாக அறியப்பட்ட இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களால் பாரிய இழப்புகளைச் சந்தித்து, 1989 இல் பின்வாங்கின. அதற்கு பின்னர் தொடர்ந்த உள்நாட்டு யுத்தத்தில், நஜிபுல்லா 1992இல் பதவி விலகி காபூல் ஐ.நா. அலுவலகத்தில் தஞ்சம் புகுந்தார். 1996இல் அவர் பாகிஸ்தான் உளவுப்படையால் கொல்லப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

முஜாஹிதீன் குழுவில் இருந்தவர்களில் ஒசாமா பின் லாடனும் ஒருவர். இந்த சோவியத் எதிர்ப்பு சக்திகளுக்கு அமெரிக்கா பாகிஸ்தானிற்கு ஊடாக ஆயுதங்களையும் பிற உதவிகளையும் செய்தது. அதனால் சோவியத் சார்பு அரசுக்கு பிந்தைய அதிகார வெற்றிடத்தில், ஓர் இஸ்லாமிய ஆட்சியை நிறுவவும், வெளிநாட்டுக் கருத்துக்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் மீதான மோகங்களை நாட்டிலிருந்து களையவும், குறிப்பாக பெண்கள் மீது கடுமையான இஸ்லாமிய சட்டத்தின் ஒடுக்குமுறைகளைத் திணிக்கவும் விரும்பிய முல்லா முகமது ஓமர் தலைமையில் 1994இல் தலிபான் உருவாக்கப்பட்டது. 1996இல் ஆப்கன் தலைநகரான காபூல் உட்பட முக்கிய நகரங்களை கைப்பற்றிய போதிலும், 2001 ஆம் ஆண்டளவிலேயே தலிபான்கள் நாட்டின் பெரும்பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். ஆனால் அதே ஆண்டிலேயே அமெரிக்காவும் ஆப்கானை ஆக்கிரமித்தது.

தலிபான்களுடான யுத்தத்தில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்து கொண்ட அமெரிக்கா, தலிபான்களுடன் இரகசிய பேச்சுவார்ததைகளை நடத்தியது. கடந்த வருடம் பெப்ரவரி 29ம் திகதி, அமெரிக்காவும் தலிபானும் கத்தார் நாட்டின் தலைநகரான டோஹாவில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். அதன்படி, ஆப்கன் மண்ணிலிருந்து 14 மாதங்களில் அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அமெரிக்கப் படைகள் ஆப்கன் மண்ணிலிருந்து வெளியேறுவதென்பது தலிபானிற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி. எனவே அவர்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற இதுவே சிறந்த தருணம். ஆனால் தலிபான் மீண்டும் ஆட்சிக்கு வருவதென்பது ஆப்கன் மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஒருபோதும் கொண்டுவராது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# கொழும்பு துறைமுக நகரம் சீனாவின் காலனியாகாது!

**-அரசாங்கம் அளித்துள்ள விளக்கம்**



சீனாவின் உதவியுடன் கொழும்பில் உருவாக்கப்பட்டு வரும் 'துறைமுக நகரம்' குறித்து ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி. என்பன பலவிதமான பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டுவரும் சூழலில், அதுபற்றி அரசாங்கத்தின் விளக்கத்தை நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் நிதியமைச்சில் ஏப்ரல் 16ஆம் திகதி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் முன்வைத்துள்ளார். அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

கொழும்பு துறைமுக நகரம் ஒருபோதும் சீனாவின் காலனியாகக் கொண்டுவரப்படமாட்டாது. அதற்கு நீதிமன்றமும் அனுமதி வழங்காது. அரசியலமைப்புக்கு முரணாகச் செயற்பட வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொதுச் சட்டத்துக்கு உட்பட்டதாகவே ஆணைக்குழுவின் செயற்பாடுகள் இருக்கும்.

குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தவறான குற்றச்சாட்டுகளை சில அரசியல்வாதிகள் முன்வைக்கின்றனர். அவர்கள் அதை நிறுத்த வேண்டும்.

கொழும்பு துறைமுக நகரத்துக்கான செயற்திட்டம் 2014 முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 2018 ஜனவரி 3ஆம் திகதி துறைமுக நகரம் தொடர்பிலான நடவடிக்கைகளை உள்ளடக்கிய பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கொழும்பு காலிமுகத் திடலுக்கு அருகாமையில் உள்ள கடற்பரப்பில் 644 ஹெக்டயர் பரப்பளவு மணலால் நிரப்பப்பட்டு அபிவிருத்தி செயற்திட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் இலங்கையின் மொத்தப் பரப்பளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகரம் இலங்கையின் நிலப்பரப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் 2ஆம் திகதி அப்போதைய உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன விசேட வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

துறைமுக நகரத் திட்டம் பற்றிய இரண்டாவது பத்திரம் 2021 ஜனவரியில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், செயற்திட்ட பூர்த்திக்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சட்டமூலம் கடந்த 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. ஆகவே, கொழும்பு துறைமுக நகரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளும் 2014ஆம் ஆண்டு முதல் கட்டம் கட்டமாக பாராளுமன்றத்தைத் தொடர்புபடுத்தி முறையாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

**சங்கீர்த்தன்**

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவை அமைப்பதற்கான நீதியமைச்சின் சட்டமூலம் சபை முதல்வரினால் கடந்த 8ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

சர்வதேச வர்த்தகம், கப்பல் தொழில் முகாமைத்துவ செயற்பாடுகள், கரைகடந்த வங்கித்தொழில், நிதிசார் சேவைகள், தகவல் தொழில்நுட்பம், வியாபார வழிமுறைகள், வெளிநாட்டவர்களை பணிக்கு அமர்த்தல், கூட்டிணைக்கப்பட்ட தலைமையகங்களின் செயற்பாடுகள், பிராந்திய விநியோக செயற்பாடுகள், சுற்றுலாப் பயணத்துறை மற்றும் வேறு துறைச் சேவைகளை மேம்படுத்துவது என்பன ஆணைக்குழுவின் நோக்கங்களாகும்.

இச்சட்ட மூலம் குறித்து தவறான கருத்துகள் பரப்பப்படுகின்றன. ஆனால் இலங்கையின் பொருளாதாரம் மந்தகதியில் இருப்பதால் நேரடி முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டிய தேவை இருக்கிறது. கொழும்பு துறைமுக நகர பொருளாதார விசேட ஆணைக்குழுவை ஸ்தாபிக்காமல் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க முடியாது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இத்தகைய முறைகள் காணப்படுகின்றன.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டின் பொதுச்சட்டத்துக்கு உட்பட்டதாகவே இருக்கும். நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாகவே அரசாங்கத்தின் செயற்பாடுகள் இருக்கும். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 5 முதல் 7 வரை இருக்கும். ஆணைக்குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

கொழும்பு துறைமுக நகரம் ஆசியப் பிராந்தியத்தின் பிரதான வலயமாகக் காணப்படுவதால் ஒருசில வரிச்சட்டங்கள் மாத்திரம் வியாபார நடவடிக்கைகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் வருவாய்க்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். கொழும்பு துறைமுக நகரம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு

**தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க...**

# இலங்கையில் சர்வதேசம் தலையிட முடியாது என்று சொல்ல முடியாது!

**-பேராசிரியர் திஸ்ஸ விதாரண**

"இலங்கையின் உள் விவகாரங்களில் சர்வதேசம் தலையிட முடியாது எனப் பேச்சளவில் மட்டுமே குறிப்பிட முடியும். ஏனெனில், இலங்கை ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது" என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை காலதாமதம் இன்றி நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம். ஜெனிவா கூட்டத் தொடரின்போது மாகாண சபைத் தேர்தல் விவகாரம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல்



விட்டதற்கு கடந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தின் இரு தலைவர்களும்தான் பொறுப்புக் கூறவேண்டும்.

மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தின்போது வாக்களிப்பில் கலந்து கொள்ளாத 14 நாடுகளும் இலங்கைக்கு சார்பாகச் செயற்பட்டுள்ளன எனச் சொல்ல முடியாது. அவை இலங்கை விவகாரம் தமக்குத் தேவையற்றது எனக் கருதியே ஒதுங்கிக் கொண்டன என்பதே உண்மையாகும். எனவே அரசாங்கம் இவ்விடயம் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். ஜெனிவா விவகாரத்தில் அரசாங்கம் சற்று வினைத்திறனுடன் செயற்பட்டிருக்கலாம் என தற்போது கருதப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது அவசியமானது. இதனையே சர்வதேசமும் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வருகிறது. இலங்கையின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட சர்வகட்சிக் கூட்ட அறிக்கையில் அதற்கான பொறிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த சர்வகட்சி கூட்ட அறிக்கையைச் செயற்படுத்தி இருந்தால் பல பிரச்சினைகளுக்குத் எப்பொழுதோ தீர்வு கிட்டியிருக்கும்.

இவ்வாறு திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

# மீண்டும் தடை செய்யப்பட்டன!

**இ**லங்கை அரசாங்கம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடர் முடிந்த கையோடு புலம்பெயர் நாடுகளில் புலிகளுக்கு சார்பாகச் செயற்பட்டு வரும் தமிழ் தேசியவாத இயங்களுக்கும், தனிநபர்களுக்கும் தடை விதித்துள்ளது.

அவ்வாறு தடை விதிக்கப்பட்ட இயக்கங்கள் வருமாறு:

- உலகத் தமிழர் பேரவை (பிரித்தானியா)
- பிரித்தானிய தமிழர் பேரவை
- கனடிய தமிழ் காங்கிரஸ்
- அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ்
- கனடிய தமிழர் தேசிய அவை
- தமிழ் இளையோர் அமைப்பு
- உலகத் தமிழர் ஒருங்கிணைப்பு குழு

இந்த அமைப்புகள் தவிர பிரித்தானியா, ஜெர்மனி, இத்தாலி, மலேசியா உட்பட வேறும் சில நாடுகளில் வாழும் தனிநபர்களும் தடை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அவர்களில் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர்

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...**

**3ம் பக்கத்தொடர்ச்சி...**


பெரும் உந்துசக்தியாக இருக்கும். அமைக்கப்படவுள்ள விசேட பொருளாதார ஆணைக்குழுவை கண்காணிக்கும் பொறுப்பு கணக்காளர் நாயகத்துக்கு உண்டு. அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது என்பதற்காக ஆணைக்குழு தன்னிச்சையாகச் செயற்பட முடியாது. மத்திய வங்கியினதும், பாராளுமன்றத்தினதும் ஆலோசனைகளுக்கு அமையவே செயற்பட முடியும்.

கொழும்பு துறைமுக நகரத்தில் 83 ஆயிரம் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். இத்துறைமுக நகரம் சீனாவின் காலனியாக இருக்கும் என்பது முற்றிலும் தவறானதாகும். இத்துறைமுக நகரம் தொடர்பில் 2014ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டுவரை வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி மற்றும் விசேட ஆவணங்கள் எவற்றிலும் எந்த இடத்திலும் சீனாவின் காலனியாக இது இருப்பதற்கான அம்சங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குறிப்பிடப்படவில்லை.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி 15 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. கொழும்பு துறைமுகத்தை சீனாவின் காலனியாக்கும் சட்டமூலத்துக்கு உயர்நீதிமன்றம் ஒருபோதும் அனுமதி வழங்காது. ஏனெனில் சீனாவின் காலனித்துவ அம்சங்களை உள்ளடக்கி சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவில்லை.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஊடகங்களுக்கு மத்தியில் சீன காலனித்துவ ஆட்சி குறித்து கருத்துரைப்பவர்கள் உயர்நீதிமன்றத்தில் அதுபற்றிய தர்க்கத்தை முன்வைக்கமாட்டார்கள். போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அரசியல்வாதிகள் முதலில் விசேட பொருளாதார ஆணைக்குழு சம்பந்தமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தைப் படித்துப் பார்த்து தெளிவு பெறுவது அவசியமானது.

# இறுதிவரை எளிய மக்களுக்காக இயங்கிய திரைப் படைப்பாளி



தமிழ் சினிமாவில் அரசியல் புரிதலுடன் இயங்கும் படைப்பாளிகள் வெகு குறைவு. அதையும் தாண்டி சினிமா உள்ளடக்கத்துக்கு மட்டும் அரசியலைப் பயன்படுத்தாமல் தான் பேசும் அரசியலுக்கும் கொள்கைகளுக்கும் பொருத்தமாகத் தனது வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டவர்கள் மிக அரிதானவர்கள்.அப்படிப்பட்ட அரிதான திரைப் படைப்பாளிகளில் ஒருவரான இயக்குநர் **எஸ்.பி.ஜனநாதன்** கடந்த மார்ச் மாதம் 14ந் திகதி நம்மை விட்டு நிரந்தரமாகப் பிரிந்துவிட்டார்.

2003 இல் வெளியாகி சிறந்த தமிழ் திரைப்படத்துக்கான தேசிய விருதை வென்ற 'இயற்கை' திரைப்படத்தின் மூலம் தமிழ் ரசிகர்களுக்கு இயக்குநராக அறிமுகமானார் ஜனநாதன். தமிழகத்தின் கடலோரப் பகுதியை வந்தடையும் கப்பல் மாலுமி ஒருவன் அங்கு வசிக்கும் பெண்ணுடன் காதல் வயப்படுவதுதான் படத்தின் மைய இழை. ஆனால் இது காதல் கதை மட்டும் அல்ல. கப்பல்கள் வந்து சேரும் கடலோரப் பகுதிகளில் எளிய மக்களின் வாழ்வியலை கப்பல் பயணிகளைச் சார்ந்திருக்கும் அவர்களது வாழ்வாதாரத்தைப் பதிவு செய்த படம். ஒவ்வொரு காட்சியிலும் பாடலிலும் கடற்கரைக் காற்றின் உப்பு வாசம் வீசியது. உள்ளடக்கம் மட்டுமல்லாமல் உருவாக்கமும் உயர்தரமாக அமைந்திருந்தது. வித்யாசாகரின் பாடல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விதம் ஜனநாதனின் கலைத் திறமையை பறைசாற்றின.

'கலை மக்களுக்காகவே' என்னும் இடதுசாரி சித்தாந்தத்தில் இறுதிவரை மிக உறுதியான பிடிப்பைக் கொண்டிருந்தார் ஜனநாதன். அவர் இயக்கிய அனைத்து திரைப்படங்களும் எளிய மக்கள் மீது சுமத்தப்படும் பிரச்சினைகளைப் பேசின. மனிதர்களின் பிரச்சினைகளுக்கும் வர்க்க (பொருளாதார) வேறுபாடுகளுக்கும் இருக்கும் தொடர்பே அவருடைய திரைப்படங்களின் பிரதான பேசுபொருளாக இருந்துள்ளன.

மருத்துவ வணிகத்தின் பெரும்பசிக்கு பலியாக்கப்படும் அடித்தட்டு மக்களைப் பற்றிய சித்திரமான 'ஈ', பழங்குடி சமூகத்தில் முதல் தலைமுறைப் பட்டதாரியாக வன இலாகா அதிகாரியாக அரசு பதவியைப்பெறும் இளைஞன் எதிர்கொள்ளும் அவமதிப்புகளையும் சவால்களையும் முன்வைத்த 'பேராண்மை', அரசு என்னும் அமைப்பில் ஊடுருவியுள்ள வன்முறைத்தன்மையை அம்பலப்படுத்திய 'புறம்போக்கு என்னும் பொதுவுடைமை' என ஜனநாதன் இயக்கிய அனைத்து படங்களும் ஏழை எளிய மக்களின் பிரச்சினைகளை விரிவாகப் பதிவுசெய்ததோடு ஜனநாதனின் இடதுசாரி அரசியல் பார்வையுடன் அந்தப் பிரச்சினைகளை அவற்றை விளைவித்த காரணிகளையும் தீர்வுகளையும் ஆராய்ந்தவை. அவர் வசனம் எழுதி அவருடைய முன்னாள் உதவி இயக்குநர் கல்யாண கிருஷ்ணன் இயக்கிய 'பூலோகம்' திரைப்படத்தையும் இந்தப் பட்டியலில் இணைக்கலாம்.

விஜய் சேதுபதி – ஸ்ருதி ஹாசன் நடித்துள்ள 'லாபம்' திரைப்படத்தின் போஸ்ட் ப்ரொடக்ஷன் பணிகள் நடைபெற்றுவரும் வேளையில் ஜனநாதன் மரணமடைந்திருக்கிறார். சில மாதங்களுக்கு முன் வெளியான இந்தப் படத்தின் டீசரில். 'லாபம்', இந்திய ஏழைகளைப் பாதிக்கும் சர்வதேச வணிக சதி ஒன்றை அனைவருக்கும் புரியவைக்கும் திரைப்படம் என்பதை உணர முடிந்தது. இதுவும் ஜனநாதனின் அரசியல் சித்தாந்தத்தை இன்னும் காத்திரமாகப் பேசும் திரைப்படமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்க வைத்தது.


தமிழ் சினிமாவில் தற்போது மாறிவரும் இரசனை, சமூக ஊடகங்களால் முன்பைவிட அதிகமாக அரசியல் பார்வைகளைப் பெற்றிருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஆகியவற்றால் அரசியல் சினிமாக்களுக்கான இடமும் செல்வாக்கும் அதிகரித்துள்ளது. ஆனால் இது நடைபெற்றிராத காலத்திலேயே அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படங்களை மட்டுமே இயக்கியவர் ஜனநாதன். தமிழ் சினிமாவில் இன்று பொருளாதார, சாதிய ஏற்ற தாழ்வுகள் குறித்த துணிச்சலாகப் பதிவு செய்யும் திரைப்படங்களும் அவற்றை முன்வைக்கும் படைப்பாளிகளும் அதிகரித்திருப்பதற்கு ஜனநாதன் போன்ற படைப்பாளிகள் முக்கிய காரணம்.

சோவியத் கலாசார மையத்தில், திரையிட்ட ரஷ்ய திரைப்படங்களைப் பார்த்து மார்க்ஸியத் தத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டவராக மாறினார், ஜனநாதன். அவருடைய எந்தப் படத்தை எடுத்துக்கொண்டாலும் வர்க்க முரண்பாடுகளை ஒழிப்பதன் வழியாகவே சாதியத்தையும், சுரண்டலையும் ஒழிக்க முடியும் என்று தனது கதாபாத்திரங்கள் வழியாகப் பார்வையாளர்களுக்கு உணர்த்திக்கொண்டேயிருப்பதைக் காணமுடியும். எந்த இடத்திலும் பரப்புரை என்கிற எல்லைக்குத் தனது திரைமொழியை கொண்டு சென்றுவிடாமல், திரைக்கதையாக்கம், உரையாடல் என்ற இரண்டையும் தொழில்நுட்பத்துக்கு இணையாகப் பயன்படுத்திய அசாதாரண இயக்குநர்.

61 வயதில் யாரும் எதிர்பாராத நேரத்தில் இயற்கையுடன் கலந்துவிட்ட ஜனநாதன் அவருடைய படைப்புகள் அவற்றால் விளைந்த தாக்கங்கள் மூலம் என்றென்றும் நம்முடன் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

**–ச.கோபாலகிருஷ்ணன்**

# ஜெனீவா: நடுநிலைமை, அடிமைத்தனம், யதார்த்தம்




**செவ்வாய்க்கிழமை** (மார்ச் 23) ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணை குறித்து வெவ்வேறு விதங்களில் வியாக்கியானப்படுத்தப்படுகிறது. 47 உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் 22 நாடுகளின் ஆதரவை மட்டும் பெற்றதை வைத்துக்கொண்டு தமக்கு வெற்றி கிடைத்துள்ளதாக இலங்கை உரிமை பாரட்டுகிறது. உண்மை, அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் ஒரு அங்கத்தவர் அல்ல, பிரித்தானியாவால் தங்களது பிரேரணைக்கு ஆதரவாக 24 நாடுகளின் ஆதரவைத் திரட்ட முடியும், ஆனால் விடயம் என்னவெனில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கொண்டு வரப்படும் ஒரு பிரேரணையை நிறைவேற்றுவதற்கு சாதாரண பெரும்பான்மையே போதுமானது. எனவே, இலங்கை தோற்கடிக்கப்பட்டது. எனவே, அரசாங்கம் யதார்த்தத்தை உணர்ந்து கொண்டு அதன்படி செயல்பட வேண்டும்.

இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு பெரும்பான்மை நாடுகளின் ஆதரவை வாசிங்டனால் திரட்ட முடியாமல் போனதற்குக் காரணம், அது இரண்டு 'குவாட்' (Quad) நாடுகளான இந்தியாவினதும் யப்பானினதும் ஆதரவைத் திரட்ட முடியாமல் போனமையாகும் எனச் சிலர் கூறுகின்றனர். உண்மை, அமெரிக்காவுக்குச் சார்பான இந்த இரு நாடுகளும் பிரேரணைக்குச் சார்பாகவே வாக்களிக்கும் என பலர் எதிர்பார்த்தனர். ஆனால் அவை வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் விட்டமை அமெரிக்காவின் புரிந்துணர்வுடனேயே எனக் கொள்ளலாம். இலங்கைக்கு எதிராக கடும் போக்கில் விரோத மனப்பான்மையுடன் செயல்பட்டால், அதன் எதிர் விளைவாக அந்த நாடு மேலும் கூடுதலாக சீனாவைச் சாரக்கூடும் என்ற எச்சரிக்கை உணர்வு மேற்குலகத்துக்கு இருக்கின்றது. இந்த இரண்டு குவாட் நாடுகளையும் ஐ.நா. மனித உரிமைப் பேரவைப் பிரேரணையின் போது 'நடுநிலைமை' வகிக்க விடாமல் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தடுக்காதிருந்தால்தான், பின்னர் அவற்றை இலங்கையுடன் பேரம் பேசுவதற்கான 'கரட்'டாகப் பயன்படுத்த முடியும் என்றுதான் இதைப் பார்க்க வேண்டும்.

ஜெனீவாவில் இந்தியாவையும் யப்பானையும் தம்மால் கையாள முடியும் என அரசாங்க அரசியல்வாதிகள் மக்களை நம்பச் செய்திருந்த போதிலும், உண்மை அதுவாக இருக்கவில்லை. இந்த இரண்டு நாடுகளும் மேற்கத்தைய மனோபாவத்திலுள்ள அடிமை நாடுகள், அமெரிக்காவின் அழைப்புக்கு அடிபணியும் நாடுகள், அவை அமெரிக்காவுக்காகச் செயல்படுபவை. ஜனாதிபதி பைடனுக்கு வாசிங்டனில் குளிர்பிடித்தால், புது டெல்லியில் பிரதமர் மோடிக்கு தும்மல் வரும். யப்பானியத் தலைவர்களும் அது போன்றவர்கள்தான்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள் ஆதிக்கம் செலுத்த முடியாதவை. ஆனால் மேற்கத்தைய பாதையை நிராகரிக்கும் நாடுகள் மீதான பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு அவற்றை அவர்களால் பயன்படுத்த முடியும். இந்தத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்த முடியாது. ஐ.நா. பாதுகாப்புச் சபையால் இலங்கை மீதான போர்க் குற்றங்களை விசாரிக்க எந்த முயற்சியையும் எந்த மட்டத்திலும் செய்யவும், தடைகளை விதிக்கவும் முடியும் என்ற போதிலும், அவற்றை வீட்டோவைப் பயன்படுத்தித் தடுக்க முடியும். ஆனாலும், இலங்கையைத் தமது விருப்பத்துக்கு ஏற்ப துன்பப்படுத்துவதற்கு அவர்களுக்கு வேறு வழிகள் உண்டு. அரசாங்கம் இப்படிப் பார்ப்பதை தவறக்கூடாது.

ஜெனீவாவில் ஏற்பட்ட தோல்விக்காக ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பியும் அரசாங்கத்தைத் திட்டுகின்றன. முன்னர் ஐ.தே.க. தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் துணிச்சலுடன் செய்தது போல, அரசாங்கம் அமெரிக்காவுடனும் பிரித்தானியவுடனும் ஒத்துழைத்து இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி நினைக்கிறது. அமெரிக்காவால் வரையப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் நிராகரித்தது சரியென்றபோதிலும், இராஜதந்திர முனையில் கிடைத்த கேவலமான நிலையை அது கவனத்தில் கொள்ள வேண்டும். மேலதிகமாக, சாத்தியமானால் ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதிப்பதுடன், வாக்கெடுப்புக்கும் விட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம், இந்தத் தீர்மானம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் தெரிய வருவதுடன், அரசியல் தேவைகளுக்காக அவர்கள் இதைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் அல்லது இலங்கையின் முயலாக ஓடுவதையும், மேற்கத்தைய வேட்டை நாய்களின் வேட்டையையும் தடுக்கவும் முடியும்.


இலங்கையிலிருந்து வெளியாகும் 'த ஐலன்ட்' (The Island) பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் (மார்ச் 25)

---

**வாசகர்களுக்கு சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகளை வானவில் தெரிவித்துக் கொள்கின்றது.**

# சின்ஜியாங் பற்றிய வதந்திகள் 'நாடகத்தை' அமெரிக்கா நிறுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது!

**-சீன வெளிநாட்டமைச்சு பேச்சாளர்**




**அ**மெரிக்காவின் முன்னாள் சிரேஸ்ட அதிகாரி லோரன்ஸ் வில்கேர்சன் (Lawrence Wilkerson) கூற்றுப்படி, "சின்ஜியாங்கின் உய்குர் பிரச்சினை" ("Xinjiang Uygur question") என்பது சீனாவை உள்ளிருந்தே சீர்குலைக்கும் அமெரிக்காவின் ஒரு தந்திரோபாயச் சதி என்பது தெரிய வந்துள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹூவா சுன்யிங் (Hua Chunying) கூறியிருக்கிறார்.

அமெரிக்க இராணுவத்தின் ஓய்வுபெற்ற கேர்ணலும், முன்னாள் அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவலின் (Colin Powell) முன்னாள் தலைமை அதிகாரியாக இருந்தவருமான லோரன்ஸ் வில்கேர்சன் 2018 ஒகஸ்டில் நிகழ்திய உரையொன்றின் வீடியோ ஒன்றை சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹூவா வழமையான வாராந்த செய்தியாளர்களின் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களுக்குக் காண்பித்தார்.

அதில் வில்கேர்சன், சீனாவை சீர்குலைப்பதற்கு சீ.ஐ.ஏவுக்கு உள்ள சிறந்த வழி, ஸிங்கியாங்கில் வாழும் உய்குர் இனத்தவர்களுடன் இணைந்து குழப்பங்களைத் தோற்றுவித்து சீனா மீது உள்ளிருந்தே அழுத்தங்களைக் கொடுப்பதுதான் எனக் கூறியிருக்கிறார்.

இது அமெரிக்காவின் தகாத செயலை எடுத்துக் காட்டுவதுடன், அதனுடைய சில மேற்குலகக் கூட்டாளிகளினதும், சில ஊடகங்களினதும் செயலையும் எடுத்துக் காட்டுகிறது. சீன எதிர்ப்புச் சக்திகள் ஒன்றிணைந்து ஆதாரமற்ற வதந்திகளை சீனாவுக்கு எதிராகப் பரப்புகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பொழுது சின்ஜியாங்கின் பருத்தி மீது இலக்கு வைத்துள்ள அமெரிக்காவும் அதன் மேற்கத்தையக் கூட்டாளிகளும், அங்கு கட்டாய உழைப்பு, பலவந்தமான கருத்தடை, இன அழிப்பு போன்ற 'குற்றங்கள்' நடைபெறுவதாகக் கூறுகின்றன. இதை வைத்துக்கொண்டு அவை சீன நிறுவனங்கள் மீதும், சில தனிநபர்கள் மீதும் தடைகளை விதித்துள்ளன.

சின்ஜியாங்கில் வாழ்கின்ற 25 மில்லியன் பல்வேறு சிறுபான்மை இனங்களின் பொது அபிலாசைகளைக் கேட்பதை விட ஒரு சிறிய தொகையினரான சீன எதிர்ப்பு சக்திகளால் புனையப்பட்ட வதந்திகளை மக்கள் நம்பிவிடுவார்கள் என அவர்கள் சிந்தனையற்று நம்புகிறார்கள்.

வில்கேர்சனின் வீடியோவைப் பார்த்த பின்னர் தங்களது உயரதிகாரிகளின் வார்த்தைகளை யாராவது நம்புவார்களா? என ஹூவா கேள்வி எழுப்பினார்.

உண்மைகள் நிரூபிப்பதின்படி, சின்ஜியாங் பிரச்சினை என்பது இனம், மதம், மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சினை அல்ல, அது பிரிவினைவாதம், வன்முறை, பயங்கரவாதம், தலையீடு என்பவற்றுக்கு எதிராகப் போராடுகின்ற பிரச்சினை. அமெரிக்காவால் "சின்ஜியாங் பிரச்சினை" எனக் கூறப்படுவது உய்குர் மக்களின் அக்கறையால் எழுந்தது அல்ல, அது சீனாவின் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, அபிவிருத்தி, வளர்ச்சி என்பனவற்றுக்கு எதிராக உருவாக்கப்பட்டதாகும்.

அமெரிக்காவும் அதன் மேற்குலகக் கூட்டாளிகளும் சேர்ந்து உலகில் உருவாக்கிய வேறு பல குழப்பங்களை ஹூவா உதாரணம் காட்டினார்.

2003இல் ஈராக் "பேரழிவுக்கான ஆயுதங்களை" வைத்திருக்கிறது என்று சொல்லிக்கொண்டு ஈராக்கின் மீது அமெரிக்கா இராணுவத் தாக்குதலை மேற்கொண்டு, ஆயிரக்கணக்கான சேதங்களை ஏற்படுத்தியதுடன், ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களை அகதிகளாகவும் ஆக்கியது. பல வருடங்களின் பின்னர் ஈராக்கில் "பேரழிவுக்கான ஆயுதங்கள்" இருக்கின்றது என்பதற்கு சிறிய அளவிலான ஆதாரமே இருந்தது என அமெரிக்கா ஏற்றுக்கொண்டது.

2018இல் "சிரிய அரசாங்கம் தனது மக்களுக்கெதிராக இராசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துகிறது" எனச் சொல்லிக்கொண்டு, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் என்பன அந்நாட்டின் மீது விமானத் தாக்குதலை நடத்தின. பின்னர் அது பொய்யான தகவல் எனத் தெரிய வந்தது.

**தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...**

# அமெரிக்காவுக்கு சவாலாக சீனாவும் ஈரானும் 25 வருட ஒப்பந்தம்!

அமெரிக்காவால் கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ள ஈரானுடன் 25 வருட இருதரப்பு பொருளாதார, வர்த்தக, அரசியல் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஒன்றைச் சீனா செய்துள்ளது.

“விசாலமான யுத்ததந்திர பங்கீடு” என அழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்தில் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மொகமட் ஜவாட் ஷறிபும் (Mohammad Javad Zarif), ஈரானுக்கு விஜயம் மேற்கொண்ட சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யியும் (Wang Yi) மார்ச் 27ஆம் திகதி ஈரானியத் தலைநகர் தெஹ்ரானில் வைத்துக் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் இரு தரப்பினரினரதும் தொடர்புகளை புதிய யுத்ததந்திர மட்டத்துக்கு இட்டுச் செல்லும் என ஈரானிய வெளிவிவகார அமைச்சு பேச்சாளர் சயீட் கட்ரிப்ஸடே தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த ஒப்பந்தம் தனியார்துறை ஒத்துழைப்பை மேலும் வளர்ப்பதுடன், சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் முன்னெடுத்து வரும் ஒரு தடம், ஒரு வழி திட்டத்தின் மூலம் உள்கட்டுமான மற்றும் மூலதன திட்டத்தையும் வலுப்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலப்பிரதி கடந்த வருடம் ஊடகங்களுக்குக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரதி தெரிவித்த விபரங்களின் பிரகாரம், நீண்ட காலத்துக்கு ஈரானின் மசகு எண்ணெய் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன், எண்ணெய், எரிவாயு, பெற்றோலிய இராசாயனம், அணுசக்தி கட்டுமானம் என்பவற்றில் சீன முதலீடும் செய்யப்படும்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் சீனாவுக்கு எதிரான நாடுகளை அணிதிரட்டிவரும் சூழலில்



சீனாவினதும் ஈரானினதும் கூட்டு அவருக்கு சவாலாக இருக்கப் போகின்றது. இது பற்றி அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ரனி பிளிங்கென், “மாபெரும் பூகோள அரசியல் பரீட்சார்த்தம்” என்ற சொற்களைப் பயன்படுத்தி தனது கருத்தை வெளியிட்டு உள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் அணுசக்தி பாவனை சம்பந்தமாக ஈரானுடன் ஒப்பந்தம் செய்திருந்தன. அமெரிக்காவில் பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் செய்த இந்த ஒப்பந்தத்தை, டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக வந்ததும் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொண்டார். அத்துடன் ஈரான் மீது மேலும் கடுமையான பொருளாதாரத் தடைகளையும் விதித்தார். ஆனால் பைடன் நிர்வாகம் ஈரானுடன் மீண்டும் அணுசக்திப் பாவனை சம்பந்தமாகப் பேச்சுகள் நடத்தப்படும் எனத் தெரிவித்திருந்தது. அதற்கான முயற்சிகள் நடைபெறும் சூழ்நிலையிலேயே சீனா – ஈரான் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் அமெரிக்கத் தடைகளால் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் ஈரானின் பொருளாதாரத்தைச் சீர்செய்ய உதவுவதுடன், பைடன் நிர்வாகத்துக்கு ஈரானின் நிலையை எடுத்துச் சொல்லும் ஒரு சமிக்ஞையாகவும் இருக்கும் என நம்பப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஈரான் வந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ ஈரானிய ஜனாதிபதி ரஹ்ஹானியையும் சந்தித்து அணுசக்தி விவகாரம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஈரான் மீதான தடைகள் குறித்து ரஹ்ஹானி, ஓகஸ்ட் மாதம் முடிவடைய இருக்கும் தனது இரண்டாவதும், இறுதியுமான பதவிக்காலத்தில் ஈரான் மீதான தடைகள் தளர்த்தப்படும் எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார். “நாங்கள் தடை நீக்கத்துக்குத் தயாராக இருக்கின்றோம். இடையூறுகள் நீக்கப்பட்டால் தடைகள் முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியோ நீக்கப்படலாம்” என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – பலஸ்தீன உரையாடலுக்கு ஆக்கபூர்மான ஊக்கங்களை அளிப்பதன் மூலமும், ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தை மீண்டும் தொடங்குவதன் மூலமும் மத்திய கிழக்கில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை அடைவதற்கான ஐந்து அம்ச திட்டத்தை சீன வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டதாகச் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கமாக இருக்கும் ‘சீனா டெய்லி’ நாளிதழ் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா ஒரு நீண்ட, மீளமுடியாத சரிவில் இருக்கின்றது. 21 ஆவது நூற்றாண்டிலும், அதற்குப் பின்னரும் வளரும் சீனாவைச் சுற்றியுள்ள அதிகார மையத்தை மத்திய கிழக்கு நாடுகளால் ஒதுக்கிவிட முடியாது என்பதை அமெரிக்கா உணர்ந்து கொள்ளும்.

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

2019இல் சீ.ஐ.ஏ. ஹொங்கொங்கில் ஜனநாயகத்துக்கான தேசிய மரபுரிமை உட்பட பல குழுக்களை “வெள்ளை கையுறை” என்ற பெயரில் உருவாக்கி அங்குள்ள சீன எதிர்ப்பாளர்களை ஒன்றிணைத்து பலாத்காரமாகக் கலகங்களை உருவாக்கி, ஹொங்கொங்கின் சட்டப் பேரவைக் கட்டிடத்தை தாக்கி சேதப்படுத்தினர்.

“இன்றைய சீனா என்பது ஒரு ஈராக்கோ, சிரியாவோ அல்லது எட்டு நாடுகளின் கூட்டணிப் படைகளின் கீழ் இருந்த மறைநத கிங் இராஜவம்சமோ (1644 – 1911) அல்ல என அமெரிக்காவை நான் எச்சரிக்க விரும்புகிறேன்” எனவும் ஹூவா குறிப்பிட்டார். அத்துடன் சீன மக்கள் சீனாவின் தேசிய சுதந்திரம், பாதுகாப்பு, தேசிய அபிலாசைகள் மற்றும் கௌரவம் என்பனவற்றைப் பாதுகாக்கும் போதிய பலத்துடனும், முழு ஆற்றலுடனும் இருக்கிறார்கள் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

சீனாவின் வெளிப்படையான, சந்தேகத்துக்கு இடமற்ற உண்மைகள், எல்லாவிதமான கீழ்த்தரமான பொய்களையும் வதந்திகளையும் அம்பலமாக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

**-குளோபல் ரைம்ஸ்**

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு முழுச் சம்பளமும் போனசும் வேண்டும்!

இலங்கை ஏற்றுமதி வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் ஆடைக் கைத்தொழில்துறை ஊழியர்களுக்கு நிறுவன உரிமையாளர்கள் வருமானம், போனஸ் போன்றவற்றில் அநீதியாக நடந்துகொள்கிறார்கள் என்றும், கொரோனா தொற்றை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அதிக இலாபம் ஈட்டுகிறார்கள் என்றும் ஆடைக் கைத்தொழில்துறை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இத்தொழில்துறையில் பணியாற்றுவோர் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் நிறுவன உரிமையாளர்கள் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவது இல்லை என்றும், தொழிற்சாலைகளில் தொழிற்சங்கம் அமைக்கும் அடிப்படை உரிமையைக்கூட சில உரிமையாளர்கள் அனுமதிப்பதில்லை என்றும் இச்சங்கங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கம், சுதந்திர ஊழியர்கள் சங்கம், இலங்கை தேசிய கடலோடிகள் சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் ஆகிய தொழிற்சங்கங்கள் ஏப்ரல் 1ஆம் திகதி கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இச் சங்கங்களின் செயலாளர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். ஆடைத் தொழிற்சாலை நிர்வாகங்கள் உடனடியாக தம்முடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும், இதேநிலை நீடிக்குமானால் சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டியிருக்குமெனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா தொற்று கடந்த வருடம் மார்ச் மாதம் கண்டறியப்பட்டு ஆடைத்தொழிற்சாலைகள் 17ம் திகதி மூடப்பட்டபோது வருடத்துக்கான நிதியாண்டு முடிவுற 13 தினங்களே இருந்தன. ஆயினும் வழக்கமாக வழங்கப்படும் ஏப்ரல் போனஸ் தொகை கொவிட்–19 ஐ காரணம் காட்டி வழங்கப்படவில்லை. போனஸ் வழங்கப்படுவது இலாபத்தில் இருந்து வழங்கப்படும் ஒரு தொகை என்ற அர்த்தம் இப்போது செல்லுபடியாவதில்லை. புத்தாண்டு சமயத்தில் பெட்டிக் கடைக்காரர்களும் தம்முடன் பணியாற்றுவோருக்கு சாரமோ, சட்டையோ வாங்கிக் கொடுப்பது இலங்கையில் நீண்டகாலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் சம்பிரதாயம். இது தவிர, பல நிறுவனங்கள் தமக்குக் கீழ் பணியாற்றுவோருக்கு இன்றைக்கும் முழு சம்பளம் வழங்குவதில்லை. ஊழியர் நலத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதில்லை என்று இங்கு ஊடகவியலாளருடன் உரையாடிய சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ் தெரிவித்தார். 2019 ஆம் ஆண்டு இத்துறையில் நிகழ்ந்த உற்பத்தி மற்றும் வருமானத்துடன் ஒப்பிடும் போது இத்துறையின் வருமானம் ஏறக்குறைய அதே அளவிலேயே உள்ளது.



தொழிற்சாலைகளில் கொவிட்–19 தடுப்புக்கான சுகாதார கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்றும், தொழிற்செய்யும் சூழல் மேம்பட வேண்டும் என கோரிக்கை விடுத்த ஊழியர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்றும், தொற்றுக்கு முன்னர் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் வருடாந்த கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு உள்ளதாகவும் தாம் சமர்ப்பித்த முறைப்பாடுகளை தொழிலக உரிமையாளர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

**நன்றி: தினகரன்**

## அருள் சத்தியநாதன்

மியன்மார், வங்கதேசம், இந்தியா ஆகிய நாடுகளில் நோய்த் தொற்று காரணமாக ஆடைத்தொழிலகங்கள் முடங்கிக் கிடப்பதால் ஆடைகளை கொள்வனவு செய்வோர் இலங்கையை நாடி வருகின்றனர்.

ஆடைத்தொழிற்சாலைகள் பிரச்சினையின்றி இயங்குகின்றன. ஆனால் ஏற்றுமதி வர்த்தகத்தின் 40 சதவீதத்தை கொண்டுள்ள ஆடைக்கைத்தொழில்துறை மற்றும் காலணி தயாரிப்பு தொழில்துறை சார்ந்த மூன்று இலட்சம் ஊழியர் நலன்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த வருட மார்ச் – மே காலப் பகுதியில் சுமார் 55 ஆயிரம் பேர் தமது தொழிலை இழந்தனர். ஏனையோரின் சராசரி மாதச் சம்பளம் 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இச் சம்பளக் குறைப்பு இன்றைக்கும் தொடர்கிறது என்று இவர் மேலும் கூறினார்.

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

சுரேன் சுரேந்திரன் குறிப்பிடத்தக்கவர்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட இந்தத் தடைகள் பற்றிய அறிவிப்பு வர்த்தமானி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தடைகள் 2014இல் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ ஆட்சிக் காலத்தில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் 2015ல் ஐ.தே.க. தலைமையில் 'நல்லாட்சி' அரசு ஏற்பட்டதும் புலிகளுக்குச் சார்பான புலம்பெயர் தமிழர் குழுக்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வலியுறுத்தியதால் மைத்திரி – ரணில் அரசின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் சிபார்சுக்கமைய சில அமைப்புகளினதும் நபர்களினதும் பெயரைத் தடைப்பட்டியலில் இருந்து நீக்கியிருந்தன. அப்படியானவர்களின் பெயர்களே தற்போது தடைப்பட்டியலில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

# இந்தியாவில் கொரோனா அதிவேகமாகப் பரவக் காரணம் என்ன?



பரிணாம உயிரியல் விதியின் அடிப்படையில் ஒரு வைரஸ் எப்போதுமே உருமாறிக் கொண்டேயிருக்கும். Mutation என அழைக்கப்படும் இந்த உருமாற்ற நிகழ்வு சில சமயம் அந்த வைரசினுடைய வீரியத்தைக் குறைக்கும், சில சமயம் அதிகரிக்கும்.

கடந்த ஆண்டு நிகழாமல் போன எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. 2020இல் நிகழ்த்தப்பட்ட பல சாதனைகள் இந்த ஆண்டு வேகமாக முறியடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வேகத்தையும் தாண்டி, 2020ல் தான் செய்தவற்றை 2021ல் இன்னும் வேகமாக, மோசமாகச் செய்து கொண்டிருக்கிறது கொரோனா.

2020இல் நடைபெற்ற கொரோனா Vs மனிதர்கள் போரில் கொரோனாவே வென்றது என சொல்லுமளவுக்கு உலகமே ஸ்தம்பித்தது. இந்த ஆண்டும் இப்போது கொரோனா கையே ஓங்கியிருக்கிறது. தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகும், பகுதிநேர லொக்டவுன் கொண்டுவரும் அளவிற்கு பாதிப்பு எண்ணிக்கை இலட்சங்களைத் தாண்டி சென்று கொண்டிருக்கிறது. இந்தியாவில் எப்போதும் இல்லாத அளவுக்கு பாதிப்பு உச்சம் தொட்டதற்கு இரட்டை உருமாறிய கொரோனா வைரஸ் காரணமா என்பதே தற்போது மருத்துவ உலகின் முன்னிருக்கும் கேள்வி.

பரிணாம உயிரியல் விதியின் அடிப்படையில் ஒரு வைரஸ் எப்போதுமே உருமாறிக் கொண்டேயிருக்கும். Mutation என அழைக்கப்படும் இந்த உருமாற்ற நிகழ்வு சில சமயம் அந்த வைரசினுடைய வீரியத்தைக் குறைக்கும், சில சமயம் அதிகரிக்கும். அவ்வகையில், கோவிட் 19 கொரோனா வைரஸ் பல உருமாற்றங்களை இதுவரை சந்தித்துள்ளது. கடந்த ஆண்டு இறுதியில் இங்கிலாந்தில் உருவான B.1.1.7 எனும் உருமாறிய கொரோனா வைரஸ் இந்தியாவில் பரவாமல் இருக்க வேண்டும் என விமானப் போக்குவரத்து கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. அதைத் தொடர்ந்து பிரேசிலில் P.1 வைரஸ், தென் ஆப்பிரிக்காவில் B.1.351 என பல உருமாறிய கொரோனா வைரஸ் திரிபுகள் கண்டறியப்பட்டன.

இந்தியாவில் கடந்த ஆண்டு இறுதியில் B.1.617 என்ற புதிய கொரோனா வைரஸ் திரிபு இருப்பதாக ஓர் ஆராய்ச்சியாளர் கண்டறிந்தார். இந்த கொரோனா வைரஸ் E484Q மற்றும் L452R என்ற இரு உருமாற்றங்களுடன் இருப்பதாகவும் கண்டறியப்பட்டது. மத்திய அரசு, இந்தியாவில் புதிய வகை கொரோனா வைரஸ் இருப்பதை 2021 மார்ச் மாதம் உறுதி செய்தது. ஆனால், இதுகுறித்து வெளிப்படையான தகவல்கள் எதையும் அரசு வெளியிடவில்லை. “இந்தியாவின் 18 மாநிலங்களில் கவலையளிக்கக் கூடிய புதிய உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது” என்று மட்டும் சொன்னது மத்திய சுகாதாரத் துறை.

ம.ஆ. ஜெனி:ஃபர்

மகாராஷ்டிரா மாநிலத்தில் இந்த ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை எடுக்கப்பட்ட மாதிரிகளில் சுமார் 61 சதவிகித மாதிரிகளில் இந்த இரட்டை உருமாறிய கொரோனா வைரஸ் இருப்பது தெரியவந்துள்ளது. ஆனால், “எங்களுக்கு இதுகுறித்து மத்திய அரசிடமிருந்து எந்த வழிகாட்டலும் கிடைக்கவில்லை. மருத்துவ ஆராய்ச்சி நிலையங்களும் வாய் வார்த்தையாக மட்டுமே இதுபற்றிச் சொல்கிறார்கள்” என குற்றம் சாட்டுகிறார், மகாராஷ்டிரா சுகாதார அமைச்சர் ராஜேஷ் தோப்.

இந்தியாவின் B.1.617 வைரஸ் சமீபத்திய தரவுகளின் படி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பத்து நாடுகளுக்குப் பரவியிருப்பது கண்டறியபட்டுள்ளது. ‘தேசி (Desi) வைரஸ்’ என அடையாளப்படுத்தப்படும் இந்த வைரஸ், முதலில் பரவிய வைரசினை விட ஆபத்தானதா, வேகமாக பரவ கூடியதா, இதற்கு எதிராக தடுப்பூசிகள் செயல்படுமா, ஏற்கனவே கொரோனா பாதிப்புக்கு உள்ளாகி குணமடைந்தவர்களை இந்த வைரஸ் மீண்டும் தாக்குமா எனப் பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

மத்திய அரசு இதுகுறித்து கடந்த ஏப்ரல் 16ந் தேதி வெளியிட்ட அறிக்கையில், “இதுவரையில் இந்த புதிய உருமாறிய கொரோனா வைரஸ் அதிகமாக பரவும் என உறுதி செய்ய படவில்லை” என கூறியுள்ளது. ஆனால், இந்தியாவில் கடந்த ஒரு மாதத்தில் மிக அதிகம் பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்படுவதற்கு இந்த புதிய வைரஸ் திரிபு காரணம் என நிபுணர்களால் சந்தேகிக்கப்படுகிறது. இதை அறிவியல் பூர்வமாக நிரூபிக்க போதுமான அளவு இந்தியாவில் பரிசோதனைகள் செய்யப்படவில்லை என்பதே அவர்களின் குற்றசாட்டு. இந்தியாவில் பாதிக்கப்பட்டவர்களின் வைரஸ் மாதிரிகளில் சுமார் 1% மட்டுமே genome sequencing எனும் கொரோனா வைரசின் மரபணுத் தொடரை அறியும் சோதனை செய்யப்பட்டுள்ளது. அதிக பரிசோதனைகள் செய்யப்பட்டால் மட்டுமே உறுதியாக புதிய வைரஸ் பற்றி அறிய முடியும்.

கொரோனா வைரசின் L452R வைரஸ் உருமாற்றம் அமெரிக்காவில் அதிக ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைரஸ் பழைய வைரஸை விட 20% அதிகமாக பரவும் எனவும்.

ஏற்கனவே பாதிப்பு ஏற்பட்டவர்கள், தடுப்பூசி போட்டுகொண்டவர்களிடம் இருக்கும் "நோய் எதிர்ப்பணு" செயல்திறன் 50% அளவிற்கு குறைந்து காணப்படும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இது ஏற்கனவே வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மறுமுறை பாதிப்படையும் சாத்தியக்கூறுகளையும் அதிகப்படுத்துகிறது.

இந்நிலையில் இந்தியாவின் புதிய இரட்டை உருமாறிய கொரோனா வைரஸ் பற்றிய ஆராய்ச்சி உலகம் முழுக்கவே கவனம் பெற்றிருக்கிறது.

வில்லியம் ஏ. ஹசீல்டின் (William A. Haseltine) எனும் ஹார்வர்ட் பல்கலைகழகத்தின் முன்னாள் பேராசிரியர் இந்தியாவின் B.1.617 வைரஸ் பற்றி ஃபோர்ப்ஸ் (Forbes) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "இந்த இந்திய வைரஸ் வகைப்பாடு, மிகவும் ஆபத்தானது என சொல்வதற்கு ஏற்ற எல்லா தன்மைகளையும் கொண்டிருக்கிறது. இந்த வைரசின் தன்மையை கண்டறிந்து, அதன் பரவலை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்வது அவசியம்" எனக் கூறியிருக்கிறார்.

இந்த புதிய வகை கொரோனா வைரசிற்கு எதிராக தற்போதைய தடுப்பூசிகள் எவ்வளவு சிறப்பாக செயல்படும் என்பதும் தற்போது சந்தேகிக்கப்படுகிறது. அதிகப்படியான பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மிகத் துரிதமாக செய்வதன் மூலமே இதற்கு தீர்வு காண முடியும். கொரோனாவின் வேகத்தைவிட நாம் வேகமாகச் செயல்பட வேண்டும். கொரோனாவுக்கும் மனிதர்களுக்குமான போரில் இந்த ஆண்டு கொரோனாவை நாம் வெல்வதற்கு இந்த வேகமும் விவேகமும் முக்கியம்.

**நன்றி: விகடன்**

# மாகாணசபை முறைமை நீக்கப்பட மாட்டாது!

***அமைச்சர் வாசுதேவ நாணயக்கார***

"அரசியலமைப்பின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையினை ஒரு சிலரின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக இரத்துச் செய்ய முடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமை, அத்துடன் மட்டும் நின்றுவிடாது அரசாங்கத்தின் நிர்வாக வழிமுறைகளுக்கும் அனுகூலமான ஒன்றாக இருக்கின்றது."

இவ்வாறு கூறியிருக்கிறார் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார. மார்ச் 25ஆம் திகதி கந்தானை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே வாசுதேவ இவ்வாறு கூறினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

மாகாணசபை முறைமையை முழுமையாக இரத்துச் செய்துவிட்டு, உள்ளூராட்சி மன்ற முறையை பலப்படுத்துமாறு அரசாங்க தரப்பிலுள்ள சிலர் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இது அவர்களின் தனிப்பட்ட கருத்தாகும். இப்படிப்பட்டவர்களின் தனிப்பட்ட கருத்துக்காக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கெனக் கொண்டு வரப்பட்ட மாகாணசபை முறைமையை ஒருபோதும் நீக்க முடியாது. அதற்கான நோக்கமோ அவசியமோ அரசாங்கத்துக்குக் கிடையாது.

எனவே, எதிர்வரும் யூலை மாதம் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் தேர்தல் முறைமையில் சட்டச்



சிக்கல்கள் காணப்படுகின்றன. பழைய முறையில் தேர்தலை நடத்துவதாயின் மூன்று மாதங்களுக்குள் நடத்திவிட முடியும். தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கல் நிலைக்குத் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை.

'நல்லாட்சி' அரசாங்கம் உரிய காலத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தியிருந்தால் இன்று அதுபற்றி மாறுபட்ட கருத்துக்கள் எழுந்திருக்காது. மாகாணசபை முறைமையினை சிலர் "வெள்ளை யானை" என வர்ணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது தவறான கருத்து.

மாகாண சபைகள் ஊடாகப் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அரச நிர்வாகத்தை பரந்துபட்ட ரீதியில் முன்னெடுத்துச் செல்வதற்கும் மாகாணசபை முறைமை பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. மாகாண, நகர, பிரதேச மட்டங்களில் மக்களின் பிரதிநிதிகள் இல்லாவிட்டால், வெறுமனே ஜனாதிபதியாலும் நாடாளுமன்றத்தாலும் மட்டும் நாட்டின் நிர்வாகத்தை முன்கொண்டு செல்ல முடியாது. எனவே, மாகாணசபை முறைமை ஒருபோதும் நீக்கப்படமாட்டாது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாக மாகாணசபை முறைமை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. வடகிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி நடத்தப்பட்டது. மாகாணசபை முறைமையை நீக்கும் திட்டமெதுவும் அரசாங்கத்துக்குக் கிடையாது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் முன்னதாகக் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனவாதத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், சில சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளுமே மாகாண சபைகள் பற்றி தவறான பிரச்சாரங்களைச் செய்து வருகின்றனர். அவர்களது பிரச்சாரங்கள் காரணமாகவே இந்த முறைமையினைக் கொண்டுவர உதவிய இந்தியாவும் இதுபற்றி பகிரங்கமாகச் சில கருத்துகளைச் சொல்லவேண்டி வந்தது எனக் கருதலாம்.

# தமிழ் உரைநடையின் தந்தை வீரமாமுனிவர்

திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திசூடி ஆகிய நூல்களை பிற மொழிகளில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர். இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களுள் பல்துறை வித்தகராகத் திகழ்ந்தவர் வீரமாமுனிவரே.

தோற்றம்: 08.11.1680
மறைவு: 04.02.1747

இத்தாலி நாட்டில் வெனிஸ் (Venice) மாநிலத்தில் மாந்துவா (Mantua) என்னும் மாவட்டத்திலுள்ள காஸ்திகிளியோனே (Castiglione delle Stiviere) என்ற சிற்றூரில் பிறந்தார்.

இயற்பெயர் கொன்ஸ்ரன்ரைன் ஜோசப் பெஸ்கி. (Constantine Joseph Beschi)

1709 – கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் இயேசுசபை குருவானார்.

1710 – தமிழகம் வந்தார். மறை பரப்பு முயற்சிக்காக முதலில் தமிழைக் கற்றுக் கொண்ட இவர். தமிழில் வியத்தகு புலமை பெற்று இலக்கணம், இலக்கியம், அகராதி படைத்து தமிழுக்குச் செழுமையூட்டினார். தமது பெயரினை தைரியநாதன் என்று முதலில் மாற்றிக் கொண்டார். பின்னர், அப்பெயர் வடமொழி என்பதாலும், நன்கு தமிழ் கற்றதாலும், தமது இயற்பெயரின் பொருளைத் தழுவி, செந்தமிழில் வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார்.

இவர் தமிழகம் வந்தபின், சுப்ரதீக் கவிராயரிடம் தமிழ் இலக்கண, இலக்கியம் கற்று இலக்கிய பேருரைகள் நடத்துமளவுக்குப் புலமை பெற்றார்.

இலக்கியச் சுவடிகைளைப் பல இடங்களுக்குச் சென்று தேடி எடுத்ததால், ‘சுவடி தேடும் சாமியார்’ எனவும் அழைக்கப்பட்டார். இவற்றில் காண அரிதான பல பொக்கிஷங்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. தமிழின் சிறப்பை மேல் நாட்டார் உணர திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திசூடி போன்ற நூல்களை பிற ஐரோப்பிய மொழிகளில் வெளியிட்டார்.

தமிழ் கற்க ஏதுவாக தமிழ் – இலத்தீன் அகராதியை உருவாக்கினார். அதில் 1000 தமிழ்ச் சொற்களுக்கு இலத்தீன் விளக்கம் அளிக்கப்பட்டது. இதுவே முதல் தமிழ் அகரமுதலி ஆகும். பின்பு 4400 சொற்களைக் கொண்ட தமிழ் – போர்த்துக்கீச அகராதியை உருவாக்கினார்.



திருக்காவலூர்த் திருத்தலத்தையும், ஏலாக்குறிச்சியில் உள்ள அடைக்கலமாதாவையும் போற்றும் வண்ணம் ‘திருக்காவலூர் கலம்பகம்’ பாடியுள்ளார்.

பல பெயர்களைக் கண்ட பொருட்களின் பெயர்ச் சொற்களைத் தொகுத்துப் 'பெயரகராதி' எனவும், பொருள்களின் பெயர்களைத் தொகுத்து ‘பொருளகராதி’ எனவும் சொற்கள் பலவாகக் கூடிநின்று ஒரு சொல்லாக வழங்குவதைத் தொகுத்துத் ‘தொகையராதி’ எனவும், எதுகை மற்றும் ஓசை ஒன்றாக வரும் சொற்களை வரிசைப்படுத்தித் ‘தொடையகராதி’ எனவும் அமைத்துத் தமிழுக்குச் செழுமை சேர்த்தவர். ‘சதுரகராதி’ கண்ட பெருமையும் வீரமாமுனிவரையே சாரும். தமிழ் மொழியில் தோன்றிய நிகண்டுகளில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது இந்தச் ‘சதுரகராதி’.

ஒரு மொழி அகராதி சதுரகராதி, இரு மொழி அகராதி தமிழ் – இலத்தீன் – அகராதி, மூன்று மொழி அகராதி போர்த்துக்கீஸ் – இலத்தீன் – தமிழ் – அகராதி என அகராதிகளை உருவாக்கியதால், ‘தமிழ் அகராதியின் தந்தை’ எனப் போற்றப்பட்டார்.

சதுரகாதியை, நிகண்டுக்கு ஒரு மாற்றாகக் கொண்டு வந்தார். (நிகண்டு என்பது சொற்களுக்கான பொருள்களைத் தருவதற்காக ஆக்கப்பட்ட நூல் வகையாகும். நிகண்டு என்னும் சொல் தொகை, தொகுப்பு, கூட்டம் என்னும் பொருள் தரும். தமிழில் அகராதிகளுக்கு முன்னோடியாக இருந்தவை நிகண்டுகள்)

அக்காலத்தில் சுவடிகளில் தமிழில் உயிர் எழுத்துக்களின் அருகில் ர சேர்த்தும் (அ:அர, எ:எர). உயிர்மெய் எழுத்துகளின் மேல் குறில் ஓசைக்குப் புள்ளி வைத்துக் கொண்டிருந்தார்கள். அவைகளின் நெடில் ஓசைக்கு புள்ளி வைக்காமல் விட்டார்கள். தொல்காப்பியக் காலத்திலிருந்து வழங்கி வந்த இந்தப் பழைய முறையை 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரமாமுனிவர் மாற்றி “ஆ, ஏ” எனவும், நெட்டெழுத்துக் கொம்பை (ெ) மேலே சுழித்தெழுதும் (ே) வழக்கத்தை உண்டாக்கினார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்து வந்தன. அவற்றை மக்கள் எளிதில் படித்தறிய முடியவில்லை என்பதனை அறிந்து உரைநடையாக மாற்றியவர் இவர்.

திருக்காவலூரில் ஒரு கல்லூரியை ஆரம்பித்து அதில் தாமே தமிழாசிரியராக இருந்து இலக்கணம் கற்பித்தார்.

தமிழ் படைப்புகள்:

- தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார் .
- கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில், தமிழில் முதல் முதலாகப் பேச்சுத் தமிழை விவரிக்க முனைந்தார்.
- திருக்குறளில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர்.
- உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், பரமார்ந்த குருவின் கதை, வாமன் கதை ஆகிய நூல்களைப் படைத்தவர்.
- திருக்காவலூர்க் ஊர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை இவரது பிற நூல்கள்.
- 1728 – புதுவையில் இவரின் பரமார்த்த குருவின் கதை என்ற நூல் முதல் முறையாக இவரால் அச்சியிடப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த நகைச்சுவைக் கதைகள் Jean de la Fontaine (1621 – 1695) எனும் பிரன்சியரால் எழுதப்பட்டது. ஐரோப்பாவில் பிரபலமாக இருந்ததை பெஸ்கி தமிழிலும் மொழிபெயர்த்தார் என்று சிலர் கருதுகின்றனர். இது தமிழில் முதல் முதலாக வந்த நகைச்சுவை இலக்கியம் ஆகும்.
- காவியத்தில் தேம்பாவணி இவர் இயற்றியது.
- தேம்பாவணி மூன்று காண்டங்களில் 36 படலங்களைக் கொண்டு மொத்தமாக 3615 விருத்தப் பாக்களால் ஆனது.

• முத்துசாமிப் பிள்ளை வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை 1822 இல் எழுதி, அந்நூலை அவரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1840 இல் வெளியிட்டார்.

• தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு. மேலும் வீரமாமுனிவரைப் போல, வேறெந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம் உரைநடை எனப் பிற இலக்கிய வகைகளில் நூல்களைப் படைத்தவர் எவருமில்லை.

• 23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன், இயேசுக் கிறிஸ்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக் கேற்ப தேம்பாவணி என்ற பெருங்காவியமாக இயற்றியது இவரின் தமிழ்ப் புலமைக்குச் சான்றாக உள்ளது.

'தேம்பாவணி' காப்பியத்தை இயற்றியதற்காக வீரமாமுனிவருக்கு, 'செந்தமிழ்த் தேசிகர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களுள் பல்துறை வித்தகராகத் திகழ்ந்தவர் வீரமாமுனிவரே. இலக்கண அறிவு, இலக்கியப் புலமை, மொழியியல் உணர்வு, பக்தி இலக்கிய ஆற்றல், ஆய்வியற் சிந்தனை, பண்பாட்டில் தோய்வு எனப் பலவகையிலும் சிறந்தவர். அவர்தம் திறமையைப் பயன்படுத்தித் தமிழுக்கு வீரமாமுனிவர் ஆற்றியுள்ள பணிகள் தமிழக வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும். தமிழுக்காகவே வாழ்ந்து தொண்டு செய்து புகழ் எய்திய வீரமாமுனிவர் 04.02.1747ஆம் நாள் அம்பலக்காட்டு குருமடத்தில் இயற்கை எய்தினார்.

**நன்றி: தமிழ் இலக்கியங்கள்**

# இலங்கை இறுதி யுத்தம் பற்றிய இரகசிய அறிக்கை பிரித்தானியாவிடம் உள்ளது!

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தகவல்

**இ**லங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றிய இரகசிய அறிக்கையொன்று பிரித்தானியாவிடம் உள்ளது என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக் கட்டத்தின்போது 2009 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மே 19ஆம் திகதிவரை நடைபெற்ற முழுமையான சம்பவங்கள் பற்றிய அறிக்கையொன்றை பிரித்தானிய அதிகாரி ஒருவர் தயாரித்துள்ளார். கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தில் பணிபுரிந்த அன்ரன் கேஸ் என்பவரே அந்த அதிகாரி. போரின் முழுமையான நடவடிக்கைகள் தொடர்பாக முழுமையான அறிக்கையைத் தயாரித்து பிரித்தானியாவுக்கு அனுப்பி வைப்பதே அவருக்கு வழங்கப்பட்ட கடமையாகும்.

அவர் தயாரித்து அனுப்பிய குறித்த அறிக்கையில் படையினரால் எந்தக் குற்றமும் இழைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேசச் சட்டத்தின் கீழ் எந்தப் பிழையும் நடைபெறவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை பற்றிய விவாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நடைபெற்றபோது அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த அறிக்கையை மறைப்பதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், நெஸ்பி பிரபு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பேசியபோது உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். பிரித்தானிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி அவர் மனுவொன்றை முன்வைத்தபோது அதனை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்துவிட்டது. அவர் 3 வருடங்கள் இதற்காக முயற்சித்போதும் அறிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை.



பிரித்தானியாவிடம் இறுதி யுத்தம் பற்றி உண்மையான தகவல்கள் இருக்கும்போது இப்பொழுது புதிதாக உண்மையைக் கண்டறியப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு எதற்காக 2 கோடியே 80 இலட்சம் டொலர்களைச் செலவழிக்க வேண்டும்? பிரித்தானியா தனக்கொரு சட்டத்தையும் எமது நாட்டுக்கு வேறொரு சட்டத்தையும் பிரயோகிக்கின்றது.

தருஸ்மன் என்பவர் அப்போதைய ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ முனால் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர். தனக்கு ஆலோசனை வழங்கவே அக்குழு நியமிக்கப்பட்டதாக மூன் என்னிடம் தொலைபேசியில் உரையாடும்போது குறிப்பிட்டார். அந்த தருஸ்மன் இலங்கைக்கு எதிராக 4 ஆயிரம் சாட்சியங்களைப் பெற்றுக் கொண்டதாகவும், 2 ஆயிரத்து 300 பேரிடம் வாக்குமூலங்கள் பெற்றதாகவும், அவற்றை இரகசியமாகப் பாதுகாப்பதாகவும், அது 2031ஆம் ஆண்டுவரை அமுலில் இருக்கும் எனக் கூறுகின்றார்.

எமது நாட்டை இலக்கு வைத்து ஐ.நா. கட்டமைப்பின் சட்டங்களை மீறிக் கொண்டுவரும் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் நாம் நிராகரிப்பதுடன், எமது நாட்டுக்கு ஆதரவளித்த நாடுகளுடன் இணைந்து எமது நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கையும் எடுத்து வருகின்றோம்.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் குறுகிய அரசியல் வேறுபாடுகளைக் களைந்துவிட்டு சகலரும் நாட்டைப் பாதுகாக்கும் எமது முயற்சியில் கைகோர்க்க வேண்டும்.

# 2 கோடி ரூபாய் வாடகைக்கு வீடு பிடித்த கொரோனா தடுப்பூசி முதலாளி...

**உ**லகின் மிகப்பெரிய கொரோனா தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனமாக 'சீரம் இன்ஸ்டியூட் ஆப் இந்தியா' (Serum Institute of India) உள்ளது. இதன் தலைவர் ஆதார் பூனவல்லா (Adar Poonawalla). இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரர்களில் இவரும் ஒருவர். இந்நிலையில், ஆதார் பூனவல்லா உலகின் மிகவும் விலையுயர்ந்த குடியிருப்பு பகுதி என்று கூறப்படும் இலண்டன் 'மேஃபேர்' (Mayfair) பகுதியில் இருக்கும் பிரம்மாண்ட மாளிகையில் குடியேறி உள்ளார். இந்தியாவில் தயாரிக்கப்படும் Oxford-AstraZeneca மாதிரி 'கோவிஷீல்ட்' (COVISHIELD) எனப்படும்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

எதிராகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த உள்நாட்டு சக்திகள் ஒரு பக்கத்தில் இனவாதப் பிரச்சாரத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். தென் இலங்கையில் உள்ள பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, அதிலிருந்து பிரிந்தவர்களால் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. என்பன இந்த அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு சிங்கள இனவாதத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர். அதற்கு சில இனவாத பௌத்த மத அமைப்புகளையும், தனிப்பட்ட பௌத்த மத குருமார்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

மறுபக்கத்தில், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், வேறு சில தமிழ் இனவாதக் கட்சிகள் குழுக்களும் கடந்த காலங்களில் ஐ.தே.க. அல்லாத அரசுகள் பதவிக்கு வந்தநேரங்களில் செய்தது போலவே, தீவிரமான தமிழ் தேசியவாதத்தைத் தூக்கிப்பிடித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரச்சாரம் செய்து வருகின்றன. இவர்களில் சில பிரிவினர் வழமைபோல சிங்கள மக்களுக்கும் பௌத்த மதத்துக்கும் எதிராகப் பிரச்சாரம் செய்வதுடன் மட்டும் நின்றுவிடாது, முஸ்லீம் எதிர்ப்பு – இஸ்லாமிய எதிர்ப்பு, என்பனவற்றிலும், கிறிஸ்தவ எதிர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் இந்தப் போக்கு ‘வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம்’ என்ற கோட்பாட்டுக்கு எதிராக இருந்தபோதிலும், அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதாக இல்லை.

இன்னொரு பக்கத்தில், முஸ்லீம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற முஸ்லீம் கட்சிகளும், சில தீவிரவாத முஸ்லீம் இனவாத – மதவாத அமைப்புகளும் இந்த அரசாங்கத்தை முஸ்லீம்களுக்கு எதிரான ஒரு அரசாக உருவகப்படுத்துவதில் மிக முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதில் அவர்கள் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதேவேளையில், பெரும்பாலும் தலைநகர் கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் வாழுகின்ற பலதரப்பட்ட இந்திய வம்சாவழி தமிழ் மக்களையும், மலையகத்தில் வாழுகின்ற ஒருபகுதித் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சில கட்சிகளின் கூட்டணியான மனோ கணேசன் தலைமையிலான ‘தமிழ் முற்போக்கு கூட்டணி’யும் எப்போதும் போலவே ஐ.தே.க. விரோத அரசுக்கு எதிராகவே செயல்பட்டு வருகிறது.

இதில் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் என்னவென்றால், இந்த அரச எதிர்ப்புக் கட்சிகள் எல்லாம் ஜனாதிபதித் தேர்தலின்போதும், பொதுத்தேர்தலின் போதும் பெரும்பான்மையான நாட்டு மக்களினால் நிராகரிக்கப்பட்டாலும், இவைகள் தெற்கு, வடக்கு, கிழக்கு, மலையகம் என எல்லாப் பிரதேசங்களையும், எல்லா இன, மத, மொழிப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், அரச எதிர்ப்பு என்ற ஒரே நோக்கத்துக்காக தனித்தனியாக இனம், மதம், மொழி சார்ந்து செயற்படுவதுடன், அடிக்கடி கூட்டாகவும் இணைந்து செயற்படுகின்றன என்பதுதான். எனவே தற்போதைய அரசாங்கம் தனக்கு பெரும்பான்மை பலம் இருக்கிறதுதானே என்ற இறுமாப்பில் இந்தச் சக்திகளின் பலத்தை குறைத்து மதிப்பிட்டால் பெரும் தவறிழைத்தவர்கள் ஆவர்.

உள்நாட்டு நிலைமைகள் இவ்வாறு இருக்க, இன்றைய சர்வதேச நிலைமையும் தற்போதைய இலங்கை அரசாங்கத்துக்கு மிகப் பாதகமாகவே இருக்கின்றது. அந்த உண்மையை மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகள் கூட்டாக ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியதிலிருந்து புரிந்து கொள்ளலாம். மேற்கு நாடுகள் தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் மீது கோபம் கொள்வதற்கு இரண்டு காரணங்கள் அடிப்படையாக உள்ளன

அதில் ஒரு காரணம், மேற்கு நாடுகளால் வளர்த்து விடப்பட்ட விடுதலைப் புலிகளை 2009இல் மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கம் தோற்கடித்ததுடன், யுத்தத்தின் கடைசித் தருவாயில் புலிகளின் தலைமைத்துவத்தைக் காப்பாற சில மேற்கு நாடுகள் எடுத்த முயற்சிகளுக்கும் இடமளிக்காமை. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கால் பதிக்கவும், இந்தியாவைப் பலவீனப்படுத்தவும், இலங்கையில் தொடர்ந்து யுத்தம் நடைபெற்று, இலங்கை பலவீனமான நிலையில் இருக்க வேண்டும் என்பதே மேற்கு நாடுகளின் விருப்பமாகும். அதற்கு மகிந்த தலைமையிலான அன்றைய அரசும், ராஜபக்ஸ சகோதரர்களின் இன்றைய அரசும் இடம் கொடுக்காதபடியால்தான் ஐ.நா. மனித உரிமைப் பேரவை போன்ற அமைப்புகள் மூலம் மிரட்டல்கள் விடப்படுகின்றன.

இன்னொரு காரணம், இலங்கையில் உருவான ஐ.தே.க. அல்லாத அரசுகளுக்கு மேற்கு நாடுகள் சிறீமாவோ பண்டாரநாயக்க காலத்திலிருந்தே பொருளாதார உதவிகள் அளிக்க மறுத்து வந்திருக்கின்றன. மறுபக்கம், இலங்கைக்கு பாரம்பரியமாக உதவி அளித்து வந்த ஈராக், லிபியா, சிரியா போன்ற நாடுகளையும் ஆக்கிரமித்து சின்னாபின்னப்படுத்தி பலவீனப்படுத்தியுள்ளதுடன், இலங்கைக்கு உதவக்கூடிய இன்னொரு நாடான ஈரான் மீதும் பொருளாதாரத் தடை விதித்து வைத்திருக்கின்றன. இந்த நிலையில் இலங்கைக்கு உதவக்கூடிய சக்திவாய்ந்த நாடுகளாக சீனா, இந்தியா, ரஸ்யா, யப்பான் என்பனவே இருக்கின்றன.

இந்த நான்கு நாடுகளில் இந்தியாவும் யப்பானும் அமெரிக்காவின் அரசியல் – இராணுவக் கூட்டணியில் உள்ள நாடுகள். எனவே, அவைகளின் இலங்கைக்கான உதவி வரையறைக்குட்பட்டதாகும். (மனித உரிமைப் பேரவைத் தீர்மான வாக்கெடுப்பின் போதும் இது வெளிப்பட்டது) இந்த நிலைமையில் உலகளாவிய கொரோனா தொற்று இலங்கையையும் கடுமையாகப் பாதித்துள்ள நிலைமையில், இலங்கை தனது உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வெளிநாடுகளில் பெற்ற கடன்களுக்கான வட்டியையும் முதலையும் திருப்பிச் செலுத்தவும், தன்னலமில்லாமல் இலங்கைக்கு உதவக்கூடிய ஒரேயொரு நாடு சீனா மட்டுமே. அதனால் இலங்கை தனது பாரம்பரிய நட்பு நாடான சீனாவிடமிருந்து உள்கட்டுமான செயற்திட்டங்களுக்காகவும், வேறு தேவைகளுக்காகவும் கணிசமான பணத்தை குறைந்த வட்டியில் பெறவேண்டிய நிலைமை உருவானது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் உருவான இந்த நெருக்கமான நட்புறவை மேற்கு நாடுகளும் இந்தியாவும் அறவே விரும்பவில்லை. மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை, இலங்கையில் சீனாவின் அதிகரித்த

பிரசன்னம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்துக்கான யுத்ததந்திரத்துக்கு இடையூறை ஏற்படுத்தும் எனக் கருதுகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை சீனாவைத் தனது எதிரி நாடாகக் கருதுவதால், இலங்கையில் சீனா செல்வாக்குப் பெறுவதை அது விரும்பவில்லை. அதனால் இந்த நாடுகள் எல்லாம் சீனாவுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், அதனுடன் சேர்த்து இலங்கையையும் குறிவைத்து வருகின்றன.

இன்றைய உலகு என்பது மிகவும் சுருங்கிவிட்டதுடன், பூகோளமயப்பட்டும் உள்ளது. எனவே உலகளாவிய சீன எதிர்ப்புச் சக்திகள் ஒன்றிணைந்து உள்ளதுடன், தமக்குப் பிடிக்காத நாடுகளையும் சீனாவின் அணியில் வைத்து நோக்குகின்றன. அப்படி நோக்கப்படும் நாடுகளில் இலங்கையையும் அவை உள்ளடக்கியுள்ளன. இந்தச் சூழ்நிலையில் இலங்கை தனது பாதுகாப்புக்கு மேற்கு நாடுகளுக்கு எதிரான அணியில் இணைந்து நிற்பதைத்தவிர வேறு வழியில்லை.

அதேநேரத்தில் இன்னொன்றையும் நாம் நோக்க வேண்டும். இலங்கையில் இன்றைய அரசுக்கு எதிராகக் கைகோர்த்து நிற்கும் வலதுசாரி, பிற்போக்கு, இனவாத சக்திகளுக்கும், இலங்கைக்கும் சீனாவுக்கும் எதிராக அணி திரண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் இடையில் அரசியல் ரீதியான இணைப்பொன்றும் உள்ளது. அவர்களது பிரச்சாரங்களை உற்றுநோக்கினால் இதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் என்னதான் மக்கள் விரோதிகள் இரும்புக் கோட்டை போலத் தோன்றினாலும், சின்னஞ்சிறிய ஒரு நாட்டின் மக்கள் கூட, ஒற்றுமையாக உறுதியாக ஒரு மனிதனைப்போல எழுந்து நின்றால், அந்த மக்களையும் அவர்களது நாட்டையும் எவராலும் தோற்கடிக்க முடியாது. இதற்கு கியூபா முதல் வியட்நாம் வரை எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன.

எனவே, உள்ளும் புறமும் எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள இலங்கையும் அதன் மக்களும், உருக்குப் போன்ற ஒற்றுமையைத் தமக்குள் கட்டி வளரப்பதுடன், சர்வதேச அரங்கில் தமக்கு உதவக்கூடிய உண்மையான நண்பர்களையும் இனம்கண்டு அவர்களுடன் நட்புணர்வை வளர்க்க வேண்டும். இதை அடைவதற்கு இனவாதமோ, சிறுபான்மை இனங்களின் உரிமைகளை மறுதலிப்பதோ, ஜனநாயகத்தை மீறுவதோ வழியாகாது. ஏகாதிபத்திய எதிர்ப்பும், தேசபக்தியும், இன ஒற்றுமையும், ஜனநாயக வழிமுறையுமே ஒரே மார்க்கமாகும்.

# ஏழை, பணக்கார நாடுகளில் தடுப்பூசி ஏற்றத்தாழ்வு: கிரேட்டா தன்பெர்க்

**உ**லகின் பணக்கார நாடுகள் பெரும்பாலான கொரோனா தடுப்பூசி மருந்துகளை எடுத்துக்கொண்டதால், ஏழை நாடுகளில் பெரும் தடுப்பூசி பற்றாக்குறை உள்ளதாக பருவநிலை செயற்பாட்டாளர் கிரேட்டா தன்பெர்க் (Greta Thunberg) குற்றம் சாட்டியிருக்கிறார்.

உலகம் முழுவதும் கொரோனா தொற்று பாதிப்பு அதிகரித்து வருவதால், அந்தந்த நாடுகள் தங்கள் மக்களுக்கு தடுப்பூசி போடும் பணிகளை துரிதப்படுத்தியுள்ளன. இந்நிலையில், உலகளவில் பருவநிலைமாற்றம் தொடர்பான தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்த கிரெட்டா தன்பெர்க், தனது அறக்கட்டளையிலிருந்து ஒரு லட்சம் யூரோக்கள் (1,20,000 டொலர்) உலக சுகாதார நிறுவன அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளார், இந்த தொகை ஏழை நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசிகளை



வாங்க உதவிசெய்யும் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கிரேட்டா கூறியதாவது: பணக்கார நாடுகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளிடையே நிலவும் தடுப்பூசி ஏற்றத்தாழ்வை எதிர்த்துப் போராடுவதற்கு அரசாங்கங்கள், தடுப்பூசி உருவாக்குபவர்கள் மற்றும் உலக மக்கள் முன்வரவேண்டும். உலகில் ஏழை மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் வயது முதிர்ந்தோர் மற்றும் ஆபத்தான நிலையில் உள்ளோருக்கு தடுப்பூசி இல்லாமல் தவிக்கும் நிலையில், பணக்கார நாடுகள் இப்போது இளைஞர்களுக்கும் ஆரோக்கியமானவர்களுக்கும் தடுப்பூசி போட்டு வருவது முற்றிலும் தவறானது.

அதிக வருமானம் கொண்ட நாடுகளில் 4 பேரில் ஒருவர் இதுவரை தடுப்பூசியை பெற்றுள்ளனர். அதே நேரத்தில் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 500இல் ஒருவர் மட்டுமே தடுப்பூசியை பெற்றுள்ளனர். எனவே சர்வதேச சமூகம், அரசாங்கங்கள் மற்றும் தடுப்பூசி உருவாக்குபவர்கள், இந்த தடுப்பூசி ஏற்றத்தாழ்வு பிரச்னையை நிவர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

கொரோனா தடுப்பு மருந்து விற்பனை வாயிலாக மட்டும் 'சீரம் இன்ஸ்டியூட் ஆப் இந்தியா' சுமார் 4 பில்லியன் டொலர் அளவிலான தொகையைச் சம்பாதிக்கும் எனக் கணிப்புகள் நிலவி வரும் நிலையில் இந்நிறுவனத் தலைவர் ஆதார் பூனவல்லா வாரம் 69,000 டொலர் அதாவது வாரம் 50 இலட்சம் இந்திய ரூபாய்– மாதம் 2 கோடி ரூபாய் வாடகை கொண்ட பிரம்மாண்ட மேன்ஷனுக்கு குடியேறியுள்ளார்.

சுமார் 25,000 சதுரடி கொண்ட இந்த பிரம்மாண்ட மாளிகை போன்ற வீட்டை ஆதார் பூனவல்லா போலந்து நாட்டின் பில்லியனர் டொமினிகா குல்க்சிக்கி (Dominika Kulczyk) –யிடமிருந்து வாடகைக்குப் பெற்றுள்ளார். ஆதார் பூனவல்லா தற்போது குடியேறியுள்ள 'மேஃபேர்' பகுதியில்தான் உலகின் பல முன்னணி பணக்காரர்களும், பில்லியனர்களும் உள்ளனர். குறிப்பாக 'போன்ஸ் 4u' (Phones 4u) நிறுவனத்தின் தலைவர் ஜோன் கவுட்வெல் (John Caudwell) போன்ற பல அரசியல்தலைவர்கள் மற்றும் பணக்காரர்களின் பிள்ளைகள் வசிக்கின்றனர்.

# இலங்கையில் மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும்

***- இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தல்***

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீதான வாக்களிப்பிலிருந்து விலகியபோதிலும், இலங்கைக்கு தமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தின்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் தம்பிதுரை, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டவும், இலங்கை அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்திய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் இந்திய



வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தம்பிதுரைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இதனைக் குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்ட உறுதியான பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கான அதிகார பகிர்வை உறுதி செய்ய, முன்னர் வாக்குறுதியளித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை, அரசியலமைப்பின் படி தமிழ் மக்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்த அனைத்து அம்சங்களையும் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கின்ற வகையில் இந்திய அரசாங்கம் தமது நிலைப்பாட்டினை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் இலங்கையைக் கொண்டு செல்ல முடியாது என்பதற்காக இலங்கை அலட்சியமாயிருக்க முடியாது!

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானம் தொடர்பில் நாடு ஐக்கியப்பட்டு ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் அல்லது விளைவுகளை எதிர்கொள்ளவேண்டும் என ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி சகி கலகே (Chagi Gallage) தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் விசாரணை பொறிமுறை தொடர்பில் மாற்றுக்கருத்துக்கள் எவையும் காணப்படக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஜெனீவாவின் நிகழ்ச்சி நிரலில் இருக்கின்றோம். நாங்கள் அச்சுறுத்தல்கள் குறித்து யதார்த்தபூர்வமாக சிந்திக்கவேண்டும். என்ன நடந்தது என்ற உண்மையை தெரிவிப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் கருத்தினை முன்வைப்பதற்கு எங்களிற்கு இன்னுமொரு வாய்ப்பு கிடைக்காது. நாங்கள் பொறுப்புக்கூறல் விடயத்தினை திறந்த மனதுடன் அணுகவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்திலிருந்து இலங்கை விலகியது பொருத்தமற்ற விடயம் என அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் இலங்கையைகொண்டு செல்ல முடியாது என்பதற்காக இலங்கை விடயங்களை அலட்சியப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த குற்றச்சாட்டுகள் குறித்த விவகாரங்களை கையாள்கின்றவர்கள், யுத்தத்தின் இறுதிகாலங்கள் குறித்தே கவனம் செலுத்துகின்றனர் என தெரிவித்துள்ள மேஜர் ஜெனரல் சகிகலகே, விடுதலைப்புலிகளின் தோல்வியை சகிக்க முடியாத உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளால் இலங்கை இலக்கு வைக்கப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார். ஜெனீவா சவாலை எதிர்கொள்வதற்கு உறுதியான முயற்சிகள் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். பெப்ரவரி – மார்ச் அமர்வு முடிவடைந்துவிட்டதால் இலங்கை தற்போதைக்கு ஜெனீவாவிலிருந்து எழக்கூடிய அச்சுறுத்தலை மறந்துவிடாது என எதிர்பார்ப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொய்களை உறுதியாக எதிர்கொள்ளாதமைக்காக அரசாங்கம் பெரும் விலையை செலுத்தியது என குறிப்பிட்டுள்ள அவர், நாட்டின் படையினருக்கு எதிராக பொய்களை தெரிவிப்பவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக காணப்படுகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார். இது மிகவும் துரதிஸ்டவசமானது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தத்தின் பின்னரும் இலங்கை தன்மீதான குற்றச்சாட்டுகளை வெற்றிகரமாக நிராகரிக்க தவறியுள்ளமை மிகப்பெரும் தியாகத்தை செய்தவர்களிற்கு, காயமடைந்தவர்களிற்கு செய்யப்பட்ட அவமானம் என ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

நிரூபிக்கப்படாத விடயங்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தனிப்பட்ட நாடுகள் நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நன்றி: தினக்குரல்